REGD NO: M 1530.

"BALAVINODHINI"

CHILDREN'S FRIEND

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்.

ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி

Vol XII APRIL 30. No. 4

PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.

N. B.:—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our Bonafide receipts.

All Rights Reserved by the Publishers.

பாலவிநோதினி

CONTENTS—பொருளடக்கம்

	பக்கம்
தெய்வ வணக்கம்	145
ஹிதோபதேசம்	146—148
முத்துத்தாண்டவர் சரித்திரம் ...	149—156
தெய்வகுஞ்சரியம்மன் திருமணக் கும்மி	157—158
இதற்கிது நட்பெனல்	159
குழந்தைவேலன் பாட்டு	160
பெண்ணாசைகொண்ட புலியின் கதி	161—163
ஒரு விநோத வழக்கு	164—165
சாதுக்களின் பெருமை	166—167
உலகசுபாவம் அல்லது இரண்டு சிறுமிகள் (முன் தொடர்ச்சி) ...	168—181
தானிய விலையைக் குறைப்பதாகாது	182—183
பாடும் நரி	184
நடராஜப்பத்து	185—186
மகாலக்ஷ்மி ஸ்தோத்ரம்	187—188
நற்போதனை	189—192

குறிப்பு:—எமது கம்பெனி கையொப்பமிட்ட எமது ரசீது பெற்றுக்கொண்டு ஏஜண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமற்போனால் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 12	1930 ௵ ஏப்ரல் மாதம்	பகுதி 4

தெய்வ வணக்கம்

ஆரணனும் நாரணனும் நாடரிய பூரணர்க்
காதி முதலான வேதத்
தரும்பதப் பொருளறி வுறுத்தியரு ளண்ணலே
அற்புதாநந்த வொளியே
காரவுணர் குலகால வீரனே தீரனே
கஞ்சமலர் வேதனஞ்சக்
கை சொண்டு குட்டிவெஞ் சிறையிட்ட தெய்வமே
காணரிய இன்ப வாழ்வே
ஆரமணிமார்பனே ஆறுமுக வேலனே
அநாதரக்ஷக தேவனே
அறியா திழைத்த பிழை குறியாது நீ யென்னை
ஆண்டருள வேண்டு மிறைவா
பாரகம் புகழ் தெய்வ ஏரகந்தனில் மேவு
பரமகாருண்ய வடிவே
பழமறைகள் தருசீல மழவிடைய ரருள்பால
பழனிமலை முருகேசனே.

(பாரதி)

210785
சென்னை-600 008

ஹிதோபதேசம்

(1) ஆசிரியரை வலம் வருதல், அவரிடம் முறைப்படி பாடம் ஓதுதல், பாடம் கேட்டல், முதலியன மாணுக்கருக்குரிய செய்கைகளாகும்.

(2) எல்லாம் அறிந்தவனும் யாதுமறியாதவனும் குணமில்லாதவனும் குற்றமில்லாதவனும் சகல நூல்களையும் ஓதியுணர்ந்தவனும் உலகத்தில் இல்லை.

(3) பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமையும், பிற உயிர்களால் தனக்கு நேரிட்ட துன்பத்தைப் பொறுத்தலும் கோப மிகுதியால் பிறருக்குத் தீங்கு செய்யாமையும் ஆகிய இக்குணங்களை மேற்கொண்டு, காமக்குரோதங்களை (விழைவு-வெகுளி) விட்டொழிப்பவன் செய்யும் தவமானது இனிது முடிவடையும் என்பது திண்ணம்.

(4) தலை மயிரினழகும் மார்பினழகும நகத்தினழகும் செவியினழகும் பல்லினழகும் அழகல்ல. நூல்கட்குப் பொருந்திய சொல்லழகே அழகாம்.

(5) அடிமைப் பெண் சமைத்ததை உண்டலும், தோழர் வீட்டில் தனியே புகுந்து நித்திரை செய்தலும், பிறர் மறந்து வைத்த பொருளைக் கவர்ந்து கொள்வதும், ஒருவரைச் சினேகஞ் செய்த பின்பு அவருடைய தீயகுணத்தை ஆராய்தலும், ஒருவரைப் பகைத்த பின்பு அவரை வஞ்சித்துக் கெடுக்காமல்

அவருடைய இழிகுணத்தைப் போற்றுதலும் அறிவுடையவர்களின் செயல்களன்றும்.

(6) தன் கணவனுடைய வரும்படி இவ்வளவென்று தெரிந்து கொண்டு அதற்கேற்பச் செலவிடுவதும், சுற்றத்தவரைத் தழுவுதலும், விருந்தினரை உபசரித்தலும், தெய்வ வழிபாடு தவரு தியற்றுதலும், மாதர்க்குச் சிறப்பான செய்கைகளாகும்.

(7) ஒரு மாது லக்ஷ்மிதேவியைப் போன்ற அழகு படைத்தவளாயிருப்பினும் தன் கணவனை மதியாமல் நடப்பாளானல் அவளழகு பயன்படாதாம்.

(8) ஒருயிரையும் கொல்லாதிருத்தல் நன்மை. கொல்லுதல் தீமை. எழுத்தைக் கல்லாமை தீமை. கோபங்கொள்வது தீமை. அறிவுடையார் சொல்வதற்கு முன்பே ஒருவராலும் பழிக்கப்படாத நல்ல வழியில் நடப்பது மேன்மையாம்.

(9) கற்று வல்லவன் பொருள் பெறுவான். கவி பாட வல்லவன் அரசனல் நன்குமதிக்கப்பட்டு அவனல் எல்லாப்பொருளையும் பெறுவான். வித்தையில் வாது செய்து வென்றவன் புகழ் பெறுவான். கல்லாதவரும் கல்லாதவருடைய கூட்டத்தைச் சேர்ந்தவரும் நல்லோர்களிடம் மதிப்படைய மாட்டார்கள்.

(10) பிறர் செய்த நன்மையை வெளியிட்டுத் தீமையை மறந்து, பிற உயிருக்கு இடையூறு நேரிட்டால் அவ்விடையூற்றை யொழித்து, ஊன்றுகோலாகிப் பிறர் பொருளை வஞ்சிப்பதை ஒழித்து

மானத்தைக் காக்கப் பிரயாசைப் படுவதே மக்களாய்ப் பிறந்தவர் கொள்ளத்தக்க கடமையாகும்.

(11) அரத்தைப்போல் தேய்க்கின்ற அதாவது தொந்தரவுக்குள்ளாக்கி வருத்துகின்ற உறவினரும், அடங்காத மனைவியும், அடங்காத அடிமையும், மரம் போன்ற புதல்வனும், நஞ்சைப் போல் நோயைச் செய்கின்ற அயலானும், ஒருவனுக்கிருப்பார்களானால் அவனுக்கு வேறு மநோவியாதி வேண்டுவதின்றாம்.

(12) தண்ணீர் வார்த்தலாகிய தருமம், சோலை முதலிய வற்றால் நிழலை யுண்டாக்கி அது வாயிலாக வருவோரது இளைப்பை ஆற்றுதலாகிய தருமம், தன் வீடு நாடி வருவோர்க்குத் தங்கியிருக்க இடங் கொடுத்தலாகிய தருமம், உண்டற்குரிய சகல பொருள் களையும் பிறர்க்குப் பகிர்ந்துண்டல், இவைகளைச் செய் பவர்கள் இம்மையில் புகழ்ச்சியும் மறுமையிற் பேரின்ப வீடும் அடைவர்.

(13) பிடிப்பிச்சை முதலியவற்றைச் சிறியவை யென்றும், அவை தரும் பயன்கள் சிறியன வென்றும் எண்ணாமல் கொடுப்பவர் பெறும்பயனைப் பெறுவர் என்பது திண்ணமாம்.

(14) நெருப்பைக் கண்ட வெண்ணெய் முதலிய பொருள்களைப்போல் மனமுருகி இரக்கும் இரவலர்க்கு வேண்டும் பொருள் தனக்கியைந்த வரையில் கொடுத்த ஒருவனுக்கு அச்சிறு கொடையா லுண்டாகும் பயன் மிகப் பெரிதாகும்.

ஈதல் அறம்.

முத்துத்தாண்டவர் சரித்திரம்

புண்ய நதியாகிய காவிரி நதி பாயும் சோழ நாட்டில் அடியார்க்கு அருள் செய்யும் பொருட்டுச் சிவபெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யுள்ள க்ஷேத்திரங்கள் பல. அவற்றுள் சீர்காழி என்ப தொன்று. இது சிறந்த நீர்வளமும் நிலவளமும் அமைந்த க்ஷேத்திரம். இங்கேதான் திருஞானசம் பந்த சுவாமிகள் அவதாரம் செய்தருளினார்.

இந்த திவ்ய க்ஷேத்திரத்தில் தாண்டவர் என்னும் பெயருடன் ஒரு சிவநேசச் செல்வரிருந்தார். முன் வினைப் பயனால் இவர் கர்ம வியாதிக்குள்ளாய் வருந் தினார். ஆகையால் இவர் ஏதேனும் ஒரு தொழிலி லுழைத்து ஊதியம் பெற்று ஜீவனம் செய்வதற் கில்லாதவரானார். தொழிற் பயிற்சி யில்லாதவராகவே, தாண்டவர் 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்பதை எண்ணி நாடோறும் ஆலயத்திற்குப் போய் பிரமபுரீசரையும் திருநிலைநாயகியையும் பயபக்தி யுடன் தரிசனஞ் செய்து ஆலயத்தை வலஞ் சூழ்ந்து பணிந்து அங்கேயே நெடுநேரம் இருந்து ஜபம்செய்து வீடு திரும்பும் நியமத்தை மேற்கொண்டார்.

தாண்டவர் இவ்வாறு ஈசுவர தியானத்தில் ஈடு பட்டிருக்கும் இக்காலத்தில் அவ்வூரில் ஒரு தாசி இருந்தாள். அவள் தாசியாக இருந்தபோதிலும் சிவ

பக்தியி லீடுபட்டு எப்போதும் சிவபெருமானைக் கீர்த்தனம் பாடித் துதித்துக் கொண்டிருந்தாள்.

தாண்டவர் சிவநேசரானதால் அவள் பாடும் கீர்த்தனங்களி லீடுபட்டு, தாசி வீடு என்று இழிவாய் எண்ணுமல் நாடோறும் ஆலய தரிசனம் செய்து திரும்பிய பின், அவள் வீடு போய் அவள் பாடும் கீர்த்தனங்களைக் கேட்டு மகிழ்வதிற் காலங் கழித்தார்.

இவ்வாறு தாண்டவர் நல்ல எண்ணத்தை மேற்கொண்டிருந்தாராலும், 'பனைமரத்தின் கீழிருந்து பாலைப் பருகினுலும் கள்ளைக் குடித்தான்' என்று உலகம் கூறுமென்பதற் கிணங்க, தாண்டவர் தாசிவீடு போவதை இழிவான செய்கையாகக் கருதி அவர் சுற்றத்தார் அவரை வெறுத்து, அவரை ஆதரிக்க மனமில்லாதவராயினர்.

இப்படிப்பட்ட நிலைமையி லிருந்தாலும் தாண்டவர் எதையும் லட்சியம் செய்யாமல்

'சிவாய நமவென்று சிந்தித்திருப்பார்க்
கபாய மொருநாளு மில்லை—உபாயம்
அதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.'

என்று ஔவைப் பிராட்டி போதித்திருப்பதைச் சிந்தையி லெண்ணிச் சதாகாலமும் 'சிவாயநம' வென ஜபித்தபடி யிருந்துவந்தார்.

ஒரு நாள் வழக்கம்போல் ஆலயம் போய் ஸ்வாமி தரிசனம் செய்து திரும்புகையில் பசியும் களைப்பும் அதிகமா யிருந்தமையால், அவர் அங்கே வாகன மண்ட

பத்தில் படுத்துப் படுத்த சற்று நேரத்திற்கெல்லாம் நித்திரை போய்விட்டார்.

தாண்டவர் அங்கே படுத்து நித்திரைபோனது அந்தக் கோவில் ஸ்தானிகர் முதல் யாருக்கும் தெரியாது. ஸ்தானிகர் அர்த்தஜாம பூஜையானதும் வழக்கம் போல் கோவிலைச் சாத்திக்கொண்டு வீடு போய்விட்டார்.

ஸ்தானிகர் கோவிலைத் தாளிட்டுக்கொண்டு போன சற்று நேரத்திற்கெல்லாம் தாண்டவர் நித்திரை நீங்கி எழுந்தார். எழுந்தாராயினும் மெய்ப் பிணியும் பசிப் பிணியும் அவரை வருத்தியபடியால் அவர் தோணியப்பரைத் தியானம் செய்தார்.

உயிருக்குயிராய் எங்கும் நிறைந்திருக்கும் சிவபெருமான் தமதன்பராகிய தொண்டர் படுந் துன்பத்தைத் திருவுளங்கொண்டு தம்மிடப் பாகத் தமர்ந்துள்ள உமாதேவியாரிடம் திருநோக்கம் செலுத்தினர்.

இறைவனுடைய திருநோக்குணர்ந்த உமா தேவியார் கிருபை கூர்ந்து, அந்தக் கோயில் குருக்களுடைய பத்து வயது வாய்ந்த குமாரத்தியைப் போல் தாண்டவர் முன் தோன்றி "ஏனையா இவ்வாறு வருந்துகின்றீர்?" என்று வினவினுர்.

தாண்டவர், "அம்மணி! நான் பூர்வம் என்ன பாபம் செய்தேனே தெரியவில்லை ! இப்போது கர்ம வியாதியினுல் கஷ்டப்படுகின்றேன் ! அதனுல் ஒரு தொழிலும் செய்யச் சக்தியில்லாதவனுனேன் ! ஒரு தொழிலுமில்லாதவனுன எனக்கு வருவாய் இல்லாமற்

போகவே வறுமைக் கஷ்டம் மூண்டு வருத்துகின்றது. இன்று இப்போது பசிக் களைப்பு மேலிட்டுத் தாங்க முடியாமல் வருந்துகின்றேன். 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்றும் 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்றும் வழங்கும் முதுமொழிகளை எண்ணி என் அப்பனாகிய சிவபெருமானைத் தியானித்துத் துதிக்கின்றேன்" என்றார்.

உமாதேவியார்—"ஐயா! நான் சிறுமியாயிருந்தாலும் உமது நோயையும் வறுமையையும் நீக்கி நீர் உய்வதற்குரிய மார்க்கம் கூறுகிறேன். அப்படியே செய்யும். என் பேச்சை அலட்சியம் செய்ய வேண்டாம்" என்று கூறிப் பின், "ஐயா! உமக்கு மிகுந்த பசியுண்டாயிருப்பதால் இப்பொழுது கொஞ்சம் அன்னம் கொடுக்கிறேன். புசியும் முதலில்" என்று வட்டகையில் கொஞ்சம் அன்னம் கொடுத்தார்.

தாண்டவர் அவ்வன்னத்தை அன்போடு வாங்கியுண்டு பசியாறிய பின், "அம்மணி! இந்த என் கொடிய வியாதி நீங்கத் திருவுள மிரங்க வேண்டும்' என்று கேட்டார்.

உமாதேவியார், "நீர் சிதம்பரத்துக்குப் போய்ச் சபாநாயகரைப் பாடும். சபாநாயகர் பக்த பராதீனர்; பரம கிருபா நிதி. ஆகையால் அவர் உம்மிடம் அன்பு கூர்ந்து உமது நோயை நீக்கி ஆதரிப்பார். இதுதான் உபாயம்" என்றார்.

தாண்டவர், "அம்மணி! நீர் சொல்வது நல்ல உபாயமே யாகும். நான் என்ன செய்வேன்! எனக்குப் பாடத் தெரியாதே!" என, உமாதேவியார், நீர், அதைப்பற்றிச் சிந்தியாதேயும். சிற்சபாநாதருடைய ஸந்நிதிக்குப் போய் அவரை வணங்கியபடி நில்லும். அப்போது அவ்விடம் தரிசிக்கவரும் அடியார்களுடைய திருவாயினின்று வெளிப்படும் சொல்லை முதற் சொல்லாக வைத்துக் கொண்டு பாடத் தொடங்குவீரானால், உமக்கு அந்த ஜகத்பிரபுவின் திருவருளினாலே பாடுவதற்கேற்ற திருவாக்குண்டாகும்" என்று தெரிவித்து உமாதேவியார் அக்கணமே ஒரு ஜோதியாகப் பிரகாசித்த வண்ணம் மறைந்துவிட்டார்.

இவ்வாறு தேவியார் மறைந்ததும் தாண்டவர், "ஆகா! என்னே விந்தை இது! இந்நேரம் என்னுடன் பேசி எனக்குத் திருவருள் புரிந்தவர் என்னை யாதரிக்கும் உலகமாதாவாகிய உமாதேவியாரென்றே தெரிகிறது. குருக்களுடைய மகளாயிருந்தால் இப்படிப்பட்ட ஜோதி சொரூபம் எப்படி யுண்டாகும்?" என்று நினைத்து, "என் தாயே! உனக்கு இப்படிப்பட்ட விளையாட்டும் வேண்டுமா? என்னைச் சிதம்பரத்துக்குப் போகச் சொல்ல வேண்டுமா? இங்கேயே நின் திருக்கண் அருள் நோக்கம் பாலிக்கலாகாதா? உன்னுடைய திருவுள்ள மெப்படியோ அப்படித்தானே எல்லாம் நடைபெறும். நாங்கள் எதைக் கண்டோம்! எதைச் செய்வோம்?" என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டே எழுந்து அம்மன் ஸந்நிதிக்குச் சென்று தேவியாரைத் துதித்துக்கொண்டே நின்றார்.

பின்னர்ப் பொழுது விடிந்தது. வழக்கம்போல் ஸ்தானிகர் முதலானவர்கள் கதவைத் திறந்துகொண்டு கோயிலுக்குள் வந்தார்கள். அவர்கள் அம்மன் ஸந்நிதியில் தாண்டவர் நிற்பதைக் கண்டு, "ஏன் ஐயா! நீர் இங்கே நிற்கிறீர்? உம்மை உம்முடைய வீட்டில் நேற்றிரவெல்லாம் தேடினார்களே!" என்று வினவினர்.

தாண்டவர் அவர்களிடம் நடந்ததையெல்லாம் சிறிதும் மாறுபாடின்றித் தெரிவித்தார். அதைக் கேட்டதும் அவர்கள் ஆச்சரியமும வியப்பு மடைந்து, தாண்டவரைப் பரம பக்தரென மதித்து அவரை அன்று முதல் **முத்துத்தாண்டவர்** என்றழைக்கலாயினர்.

அப்பால் தாண்டவர், திருநிலைநாயகி யம்மனுடைய கட்டளைப்படி அவ்வூரைவிட்டுப் புறப்பட்டுச் சிதம்பரம் போய், திருவீதி வலமாக ஆலயத்துக்குட் பிரவேசித்து சிவகங்கையில் நீராடி நித்யாநுஷ்டான விதிகளை முடித்துக்கொண்டு ஈரவுடையுடன் ஸந்நிதானத்துக்குச் சென்று அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்து மனமுருகிப் புளகமடைந்து ஆநந்தக் கண்ணீர் பெருகும்படி பரவசப்பட்டு நின்றார்.

அப்பொழுது நடராஜப் பெருமான் திருவருளால் தரிசனத்துக்கு வந்த பக்தர்களில் ஒருவரின் வாக்கொன்று தாண்டவர் செவியிற் பட்டது. தாண்டவர் அதனைப் பற்றிக்கொண்டு பாடத் தொடங்கினார். அது கீர்த்தனமாக வெளிப்பட்டது.

அந்தக் கீர்த்தனத்தைக் கேட்ட சபாநாதர் அவர்க்கிருந்த நோய் நீங்கும்படி திருவருள் புரிந்தது

மல்லாமல், பஞ்சாக்ஷரப் படியில் ஐந்து பணம் வைத்து எடுத்துக்கொண்டு ஜீவனம் செய்யும்படி கட்டளையிட்டருளினார்.

தாண்டவர் அந்தப் பணத்தை வேண்டாமென்று மறுக்க அஞ்சி, இறைவன் கட்டளையைச் சிரசாக வகித்து, அதனை எடுத்துக்கொண்டு சீர்காழி சென்றார்,

இதன்பின் தாண்டவர் நாடோறும் சீர்காழியிலிருந்து சிதம்பரம் வந்து சபாநாயகர் ஸந்நிதியில் வணங்கி நிற்பதும் அப்போதும் தொண்டர்கள் வாக்கினின்று வெளிப்படும் வாக்கை முதற் சொல்லாகக் கொண்டு கீர்த்தனம் பாடித் துதிப்பதும் பின் இறைவனுடைய திருவருளால் பஞ்சாக்ஷரப் படியில் வைக்கப்படும் ஐந்து பணத்தை எடுத்துக்கொண்டு சீர்காழி போய் இரவு தங்கி யிருப்பதும் வழக்கமாகக்கொண்டு ஆநந்தமாக வாழ்ந்து வந்தார்.

இப்படியிருக்கையில் ஒருநாள் சபாநாதர் ஸந்நிதியில் தொண்டர் வாக்கினின்று ஒரு சொல்லும் வெளிப்படவில்லை. அப்போது தாண்டவர் "**பேசாதே நெஞ்சே**" என்று தொடங்கிக் கீர்த்தனம் பாடி மகிழ்ந்தார். பின்னரொரு நாள் தாண்டவர் சிதம்பரத்துக்கு வருகையில் வழியில் கொள்ளிடத்தில் வெள்ளம் பெருகி அவரைப் போகவொட்டாமல் தடுத்தது. அதனால் தாண்டவர் மனம் வருந்தி நடராஜப் பெருமானைத் தியானஞ் செய்து, "**காணாமல் வீணிலே காலங் கழித்தேனே**" என்று தொடங்கிக் கீர்த்தனம் பாடினார். பின் கொள்ளிடத்தில் நடராஜப் பெருமா

னுடைய திருவருளால் வெள்ளம் விலகி வழியுண்டாயது. அது கண்ட தாண்டவர் மகிழ்ந்து கொள்ளிடத்தைக் கடந்து சென்று **“தரிசனஞ் செய்வேனே”** என்று தொடங்கிக் கீர்த்தனம் பாடிக்கொண்டே நடந்து சிதம்பரமடைந்து ஸந்நிதியில் வழக்கம்போல் கீர்த்தனம் பாடத் தொடங்கி, **“கண்டபின் கண் குளிர்ந்தேனே”** என்று தொடங்கிக் கீர்த்தனம் பாடி மகிழ்ந்து வீடு திரும்பினார்.

அப்பாலொரு நாள் மார்க்கத்தில் அவரைப் பாம்பு கடித்துவிட்டது. அதனால் அவர் **“அருமருந்து”** என்று தொடங்கிக் கீர்த்தனம் பாடினார்; உடனே விஷம் நீங்கி உய்ந்தார்.

அப்பால் இவ்வாறே சபாநாதர் பேரில் அநேக கீர்த்தனங்கள் பாடித் துதித்து மகிழ்ந்து அவருடைய கிருபைக்குப் பாத்திரமாய் முடிவில் —**“மாணிக்க வாசகர் பேறெனக்குத் தரவல்லையோ அறியேன்”** என்று பாடுகையில் சிற்சபையில் உண்டான ஜோதியில் விதேகத்துடன் கலந்துகொண்டனர்.

சுபம்

இனி ஒவ்வொரு மாதச் சஞ்சிகையிலும் தாண்டவர் பாடியருளிய கீர்த்தனங்களைக் கொஞ்சங் கொஞ்சமாக வெளியிட்டு வருவோம்.

குழந்தைகளிடம் அடக்கம் விளங்கட்டும்.

தெய்வகுஞ்சரியம்மன் திருமணக்கும்மி

(முன் தொடர்ச்சி)

அம்பிகை பாகனப் போதுதிருமுகம்
ஆறுகொண் டாறுநுதற் பொலியும்
அம்பகமாறினும் ஆறு தணற்பொறி
அன்போ டளித்துப் பவனனொடு 16

அக்கினிதேவனை நீவிருவரும்
ஆகக்கொண்டேகிக் கங்காநதியில்
வைக்கவென்றனவ ரவ்வண்ணம் செய்து 17
மகிழ்ந்தனர் கங்கை சரவணத்தில்

இட்டன ளெம்மை அடிமைகொண்ட முரு
கேசன் திருவுரு வாறுகொண்டு
மட்டவிழ் செங்கமலத் திருப்பீடத்தில்
மானிலமுய்ய அமர்ந்திருந்தான். 18

பாதிமதியணி ஈசனுமை முகம்
பார்த்து நின்பாலனைக் கொண்டுவரப்
போதுநா மென்று ரிஷபத்தின் மேலேறிப்
போயினான் கங்கைநதி யருகே. 19

சங்கரி தன்சிறு பாலனைக் கண்டுள்ளே
தாங்காமகிழ்ச்சிக் கடல்பெருக
அங்கையா லாறு மகவையும் சேர
அணைத்தெடுத்தாள் முருகேசனுந்தன் 20

ஆறுமுகங்கள் ஈராறு புயங்களீ
ராறுநயன மீராறுகாம்
சீரடிப்பத்ம யூகம் பொலி சுந்தர
தெய்வசொரூபம் துலங்க நின்றான். 21

கண்ணுக்கடங்கா வழகுகண் டம்பிகை
காதல்பெருகக் கசிந்துருகி
வண்ணக்கலசத் திருமுலைப் பாலூட்டி
வாய்முத்தங்கொண்டு மனமகிழ்ந்து 22

கந்தனெனத் திருநாமம்புனைந் தரன்
கையிலளிக்க மகேசுவரனும்
மைந்தனையுச்சி முகந்து மகிழ்ந்துபின்
மாதொடு வெள்ளிமலைக் கடைந்தான். (வரும்)23

(சிவானந்ததாசன்)

மேல்நாட்டில் மாடம் தோரேல்சன் என்னும் பெயர்கொண்ட பெண்பாலர் ஒருவர் ஐஸ்லண்டின் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். இவ்வணங்கை யாவரும் முடிசூடா ராணியென்று புகழ்கின்றனராம்.

கானடா தேசத்துக்கு யாத்திரையாகச் செல்கிறவர்கள் அங்கே கிடைக்கும் அபூர்வ சாமான்களை வாங்குவது வழக்கம். அப்படி அங்கே வாங்கப்படும் சாமான்களுக்கு அங்கே அவ்வரசாங்கத்தார் வரி வாங்குவதுண்டாம். அப்படி வாங்கிய வரியில் 1929-ம் ஆண்டில் வசூலான தொகை 6 கோடி பவுனென்று கணக்கு வந்திருக்கிறது.

இதற்கிது நட்பெனல்

கற்றவர் தமக்குமித் துருகல்வி, பங்கேரு
கந்தனுக்குக் கதிரவன்
கலபமயிலுக்கு முகில், செறியாம்பல் பைங்குவளை
கட்கு வெண்டிங்கள் செங்கோல்
கொற்றவர் தமக்கெலாக் குடிகளும் கற்புயர்
குலத்திற்கு நல்லொழுக்கம்
கோதறு குடிப்பிறப்பிற் குயிர்க்கருளறிவு
கூட்டுமுன் அநுக்கிரகம் வந்
துற்றதேகிக்கு நோயின்மை வான் பயிர்களுக்
குறவு களையின்மை அறிவோ
டோங்கு மிளமைக்குமிடி இன்மை பெருசெல்வத்தி
னுக் கதிற் குறைவிலாமை
புற்றரவினுக்கரி அரன்சதா மித்துரு
புயங்கமலைவாழு மயிலோய்
புனவள்ளி தெய்வயானைக்கு மணவாளனே
போரிவடிவேன் முருகனே.

(திருப்போரூர்ச் சதகம்)

குழந்தைகட்குரிய

குழந்தைவேலன் பாட்டு

(அதோ வாராண்டி—என்ற பாட்டு மெட்டு)

1. அதோ வராண்டி நம்முடைய ஆண்டவன் தாண்டி
அவனை நாம் போய்ப் பணிவோம் அருள்புரிவாண்டி (அதோ)

2. கானகத்தில் வேடனாகக் காத்திருந்தாண்டி
தேனுந் தினைமாவு முண்ணத் திரிந்துவந்தாண்டி— „

3. வேங்கைமரமாகி நின்று வேடருக் கொளித்தான்
தாங்காமலே வள்ளியம்மையைத் தானே கைப்பிடித்தான்
(அதோ)

4. சூரனை ஸம்ஹாரம் செய்த சுயம் பிரகாசண்டி
பார்தனிலே அவனைப்போல பார்த்ததில்லையடி — „

5. தேவர்களைக் காக்கச்சென்று தேவியை மணந்தான்
மூவர்முதல் தேவர் தொழும் முதன்மைபெற்றாண்டி „

6. சத்திவடி வேலனவன் ஷண்முகநாதன்
முத்திவழி தனைக் காட்டும் மூலகாரணன் „

7. செஞ்சொற் சிவாநந்தனுக்குச் செல்வியாகிய
குஞ்சரிசொல் பாடல்களைக் கோத்தணிந்தாண்டி - „

(பாலஸரஸ்வதி தேவகுஞ்சரி)

கற்றாரைக் கற்றாரே காமுறுவர்.

பெண்ணாசைகொண்ட புலியின் கதி

ஒரு காட்டில் ஒரு குடியானவன் தன் காட்டை உழுதுகொண்டிருந்தான். அப்பொழுது பக்கத்திலிருந்த ஒரு மலையில் பதுங்கியிருந்த பெரிய புலி ஓடிவந்து உழவுமாடுகளில் ஒன்றின் மேற்பாய்ந்து அதைப் பிடித்துக் கொண்டது. குடியானவன் பயப்பட்டுக் கண்ணீர் பெருக்கி அழுதான்.

அதைக்கண்ட புலி, குடியானவனை நோக்கி "ஏன் அழுகிறாய்?"— என்று கேட்டது.

குடியானவன்—"புலியாரே, எனக்கொரு பெண்ணிருக்கிறாள். அவள் வீர தீர பராக்ரமங்களுடைய ஒரு புருஷனை விவாகம் செய்து கொள்ள விரும்புகிறாள். அப்படிப்பட்ட வரனை அடைய நான் எவ்வளவோ பாடுபட்டு வருகிறேன். இன்று நீர் என் மாட்டின்மேற் பாய்ந்து அதைப் பிடித்துக்கொண்ட உமது சாமர்த்தியங் கண்டதும் உம்முடைய வீரத்தைப் புகழ்ந்தேன்; மகளுக்கு அவள் விருப்பப்படி புருஷன் கிடைத்தான் என்று மகிழ்ந்தேன். ஆனால் நீர் மிருகமா யிருப்பதை எண்ணி எங்கள் குலத்துக்கும் உலகத்துக்கும் இந்த சம்பந்தம் விரோதமாகுமே — என்று வருந்துகின்றேன்" என்றான்.

புலிக்கும் பெண்ணின்மேல் ஆசையுண்டாயிற்று. அதனால் அது, "வீரன் என்னும் தைரியசாலி எந்த

குலத்திலே இருந்தாலும் எப்படியிருந்தாலும் குற்றமில்லை. மேலும் என்னிடம் கொலைத் தொழில் இல்லை. அதை நான் இனி விரும்புவதில்லை. உம்முடைய மகளைக் கொடுத்தால் வேண்டிய செல்வம் கொடுப்பேன்'' என்று சொல்லிற்று.

குடியானவன் "அப்படியானால் நான் என் வீட்டுக்குப் போய் என் மகளைக் கேட்டு அவளுடைய அபிப்பிராயம் தெரிந்துகொண்டு வருகிறேன்'' என்று சொல்லித் தான் காட்டை விட்டு அப்பாற் போய் ஒரு பக்கம் மறைந்திருந்து, கொஞ்ச நேரத்திற் கப்பால் புலியிடம் வந்து "புலியாரே, உம்முடைய வீரத்தையும் நீர் கூறியதையும் என் மகளிடமும் பந்துக்களிடமும் சொன்னேன். அவர்கள் இப்பொழுதே இன்றே விவாகத்தை முடிக்கவேண்டு மென்கிறார்கள்; அப்படிப் பட்ட வீரன் கிடைப்பதும் அருமை என்கிறார்கள். ஆனால் என் மகள் மாத்திரம் சிறிது முகவாட்டமுற்றாள். காரணமென்ன வென்று விசாரிக்கையில் அவள், 'புலி' வீரன் என்பது சரி. அதன் இரு கரங்களில் நகங்களும் வாயில் கோர தந்தங்களு மிருக்கின்றன. அதை நான் தழுவி எப்படி முத்தமிடுவேன். அந்தக் குறையை நீக்க வேண்டுமே' என்றாள். அதற்கென்ன செய்வது? '' என்று கேட்டான்.

பெண்ணாசை கொண்ட புலி "அன்பிற் சிறந்த மாமா! நான் என் கோர தந்தங்களையும் கை நகங்களையும் மேலேபட விடாமல் அடக்கிக் கொண்டு உமது

குமாரத்தியுடன் கொஞ்சிக் குலாவி விளையாடுகிறேன்'' என்றது.

குடியானவன், "இதோ பாரும் எங்கள் கரங்களை. க்ஷவரகன் நகங்களை வாங்கிப் போடுகிறான். அப்படிப் போல நீரும் வாங்கிப் போடுவது நல்லது'' என்றான். புலி "அப்படியே செய்யும்'' என்றது.

குடியானவன் உடனே வேகமாய்ச் சென்று ஒரு தச்சனை யழைத்து வந்து, "இவன் தான் க்ஷவரகன்'' என்று சொல்லி, புலியினுடைய பற்களைக் குறட்டைக் கொண்டு பிடுங்கச் செய்தான்; கை கால் நகங்களை உளியினால் செதுக்கும்படி செய்தான்.

உடனே புலி "இனிக் கவலை யில்லையே! கல்யாணம் செய்யலாமே'' என்று கேட்டது. குடியானவன் "இதோ வந்தேன்! இரு''— என்று கூறி ஒரு பெரிய தடியை எடுத்து வந்து நையப் புடைத்து "ஓடு-போ ஓடு-பெண்ணா !— கல்யாணமா! கல்யாணமா ! இனி இழவுதான் உனக்கு!''—என்று கூறித் துரத்தினான். புலி குஷ்டரோகியினுடைய கையைப்போன்ற தன் மொட்டைக் கையின் பலத்தைக் கொண்டு குடியானவனைத் தன்னாலியன்ற வரையில் எதிர்த்தது; கடைசியில் அடி பொறுக்கமாட்டாமல் ஓடி மலையிலே போய் ஒரு குகையில் நுழைந்து இசிவு கண்டதனால் இரண்டு நாட்களில் இறந்துபோயிற்று.

நல்ல சொல்லை எந்நாளும் நீ சொல்லு.

ஒரு விநோத வழக்கு

இங்கிலாந்தில் ஒரு மாது தன்னைத் தள்ளிவிட்ட தன் கணவன்மீது ஜீவனாம்ச வழக்குத் தொடுத்தாள். அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்கும்படி தீர்ப்பேற்பட்டது. அதன்படி அவள் கணவன் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுத்துவந்தான். இரண்டு வருஷகாலத்திற்கப்பால் திடீரென்று நிறுத்திவிட்டான். அவள் அதுபற்றி நியாயஸ்தலத்தில் வழக்கிட்டாள். அவன் இச்செய்தி யறிந்து ஒருவருக்குந் தெரியாமல் எங்கேயோ போய்விட்டான். அப்பால் இரண்டு வருஷங்கள் வரையில் அவனைப்பற்றி ஒரு துப்பும் கிடைக்கவில்லை.

அப்பால் ஒரு நாள் யாரோ ஒருவன் புகைவண்டி ரயிலில் அகப்பட்டு இறந்துபோனான். அவனைப் போய்ப் பார்த்த அந்த மாது அவனுடைய சாயலும் அவயவங்களும் தன் கணவனுடைய உருவத்தையே ஒத்திருந்தபடியால், அவள் அவனைக் கணவனெனவே தீர்மானஞ் செய்து கொண்டு வருத்தமுற்றதுமல்லாமல் அவனை அவளே அடக்கஞ் செய்தாள். இறந்த அந்த மனிதன் இன்ஷியூரன்ஸ் கம்பெனியில் பணம் போட்டிருந்தான். அதையறிந்த அம்மாது அந்தப் பொருள் தன்னைச் சேரவேண்டுமென்று கம்பெனிக்கு மனுச் செய்து கொண்டாள். கம்பெனிக்காரரும் கணவனுடைய சொத்தை மனைவி யடைவது சகஜந்தானே என்று நம்பிப் பொருளைக் கொடுத்துவிட்டனர்.

அப்பால் பத்து மாதங்களுக்குப் பிறகு புகைவண்டிப் பாதையில் இறந்து போனவன் இன்னானென்பது வெளிவந்தது. இனி யார் என்ன செய்வது?— இன்ஷியூரன்ஸுக்காரர் தாங்கள் ஏமாந்ததை உணர்ந்தனராயினும் தங்களிடமிருந்து பணம் பெற்ற அந்த மாதை நெருக்கினர். அவள் தான் வாங்கின பொருளை இன்னது செய்தாளென்று பிறர் அறியா வண்ணம் எப்படியோ சேமித்து வைத்து விட்டாள். இன்ஷியூரன்ஸ் கம்பெனிக்காரர் அவளை ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆனால் இறந்தவனுடைய உண்மை வாரிஸுக்கு உத்திரவாதியாயினர்.

அப்பால் நியாயஸ்தலத்தில் வழக்கெடுப்பதில் தேர்ந்த அந்த மாது, தன் கணவனைக் கண்டு பிடித்துத் தனக்கு ஜீவனாம்சம் ஏற்படும்படி செய்ய வேண்டுமென்று நியாயஸ்தலத்தில் மனுச் செய்து கொண்டாள். மாஜிஸ்டிரேட் அவளை விசாரிக்கையில், அவள் "என் கணவன் தமது விலாசத்தைத் தெரிவிக்க ஏன் மறுக்கிறார்"? என்று கேட்டாள்.

அவர் "விலாசமா? முன்னர் நீர் கூறியது போல் அவருடைய விலாசம் மேலுலகத்திலல்லவா இருக்க வேண்டும்? 'இறந்துபோன மனிதனைக் கைது செய்' என்றால் வாரண்டு பிறப்பிக்க முடியாதென்று உமக்கு ஏன் தெரியாமற் போயிற்று?" என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் கோபங் கொண்ட அவள், "இதில் ஒன்றும் செய்ய இயலாதா? ஆடவர்களாகிய நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நான் தெரிந்து கொண்டேன். ஆடவர் ஆடவர்க் கநுகூலமாயிருப்பது சகஜந்தானே', என்று கூறி "இனி பெண்கள் ஆடவரை மணம்புரியாமலும் மக்களைப் பெறாமலும் இருக்கக்கடவர்"—என்று சாபமுந் தந்து சென்றனள்.

சாதுக்களின் பெருமை

சாதுக்கள் ஒருவர்க்கு ஏதேனும் வரம் அளிப்பார்களானால் அதனை எந்த விதத்திலாவது நிறைவேற்றப் பார்ப்பார்கள்; வாக்களித்ததற்காக வருந்த மாட்டார்கள். அவர்களுடைய வார்த்தை பொய்யாகாது. சாதுக்களுக்கு அவர்களெண்ணிய கர்மங்களுக்குத் தக்க சாதனங்களைப் பகவான் கூட்டி வைப்பார். அவர்களால் பிறருக்கு யாதொரு பயமும் கெடுதியும் நேரிடா. ஸாதுக்கள் ஸத்தியத்தால் சூரியனை நடத்துகிறார்கள்; தவத்தினால் பூமியைத் தாங்குகிறார்கள். மூன்று காலங்களிலுமுள்ள சகல பதார்த்தங்களுக்கும் சாதுக்களே கதியாவார்கள்.

சாதுசங்க முடையவர்களுக்கு ஒருவிதமான இடையூறும் நேரிடாது. வினை வசத்தினால் நேரிட்டாலும் அது சூரியன் முன்னே பனியைப்போல் நீங்கும். சாதுக்கள் பிரதிபலனை எதிர்பாராமல் உதவி செய்வார்கள். சாதுக்களுடைய அநுக்ரஹத்தால் விசேஷ கௌரவமும் ஐசுவரியமும் ஸந்தோஷமும் ஏற்படும். துஷ்டனை ஆச்ரயித்தால் வறுமை மேலிடுவது மல்லாமல் கௌரவக் கேடு முண்டாகும். ஸாதுக்களுடைய கருணை வீண்போகாது. அண்டினவர்களைக் காப்பதே ஸாதுக்களின் சுபாவம்; தர்மப்—என்று

சாதுக்களின் பெருமையை எமதர்மராஜனிடம் கூறி ஸாவித்திரி தன் கணவனுயிரை யாசித்தாள்.

இந்த உயர்ந்த நீதியில் எமதர்மராஜன் ஈடுபட்டு ஸாவித்திரிக்கு அவள் விரும்பியபடி வரங்களை அளித்து அவள் கணவனையும் உயிர்ப்பித்து ஆசீர்வாதஞ் செய்தனுப்பினார்.

(பாரதம்.)

நல்ல குணத்தை விடுவது கூடாது

மார்க்கண்டேயர் என்னும் ரிஷி ஒருவர் சிவ பூஜை செய்து கொண்டு மகா சிவ பக்த சிரோமணியாக விளங்கினர். தெய்வ பக்தி செய்வது உத்தமமான குணங்களில் முதன்மையானது. அந்த குணம் அவரிடம் விளங்குவது கண்டு அவரை எல்லோரும் புகழ்ந்து வந்தனர்.

இந்த ஒரு நல்ல குணம் அவரிடம் சிறந்திருந்தபடியால் மற்ற நல்ல குணங்களெல்லாம் அவரிடம் தாமே குடிகொண்டன.

இப்படிப்பட்ட அவர் உயிரைக் கவர ஒருநாள் யமன் வந்துவிட்டான், அப்பொழுது அவர் சிவபூஜை செய்து கொண்டிருந்தார். தெய்வ பக்தியே சிறந்த துணையென நம்பியிருந்தார்.

மார்க்கண்டேயர் செய்த பூஜையைப் பார்த்த யமன் பிரமித்தான். அப்பால் அன்பாய்த் தன் வருகையை அவருக்கு உணர்த்தினான். மார்க்கண்டேயர் அந்தப் பக்தியைக் கைவிடாமல் கலங்கா நிலையிலிருந்து ஆராதனை புரிந்து வந்தார

பின் யமன் சினங்கொண்டு அவரைப் பிடிக்கப் பாசக் கயிறு வீசினான். அப்பொழுதும் மார்க்கண்டேயர் 'அரனே கதி' என்று பகதிசெய்து கொண்டிருந்தார். சிவபெருமான் அந்தப் பக்தனை காப்பாற்ற லிங்கத்திலிருந்து எழுந்து யமனை உதைத்துத் தூரத்தி யருளினார்.

குணமது கைவிடேல்

இதன் பொருள்:—குணமது—உன்னிடம் விளங்கும் மேலான குணங்களை, கைவிடேல் = நீ கைவிடாதே

உலகசுபாவம் அல்லது இரண்டு சிறுமிகள்

(முன் பக்கத் தொடர்ச்சி)

தத்துவ சாஸ்திரியாரைத் தனது பெற்றோர் மேல்மாடிக்கு அழைத்துக்கொண்டு போனபிறகு விசாலாக்ஷியும் நளினாக்ஷியும் பேசத் தொடங்கினார்கள்.

விசா—அடி நளினா! நாமென்ன ஆத்திரக்காரரா யிருக்கிறோம், பார்த்தாயா?

நளி:—எந்த விஷயத்தில் ஆத்திரப்பட்டுவிட்டோம்? நீ எண்ணாததெல்லா மெண்ணி ஏங்குகிறாய்.

விசா:—அல்லடி; வந்தவரோ தத்துவ சாஸ்திரியாம். நாமோ அபலைகள். முன்பின் பாராமல் அவரை முகவாட்டப்படுத்தி விட்டோமே. அது நமக்கு அடாதடி. 'பெண்புத்தி பின்புத்தி' என்பது சத்தியமே.

நளி:—அப்படி நாமொன்றும் அக்கிரமம் செய்யவில்லையே. வித்வ சாமார்த்தியத்தைத்தானே காட்டினோம். அது பற்றிப் படித்தவர் சந்தோஷியாமற் போவரோ?

விசா:—சந்தோஷிப்பவரு முண்டு; சலித்துக் கொள்பவரு முண்டு.

நளி—பண்டிதரே யன்றிப் பாமரரும் தம்மைத் தாமே புகழ்ந்துகொள்ளப் பிற்பட மாட்டார்கள். இது தான் உலகசுபாவம்.

விசா:—இப்பொழுது நீ உலகசுபாவத்தைக் கண்டு பிடித்தாய். நவீன கவி யொருவர்

குலத்தில் தனத்தில் குணந்தருநற் கல்வி
நலத்தில் எனக்கிந்த ஞாலத்—தலத்தில்
சமனாவா ராரென்று தற்புகழா தாரார்?
கமலாட்சி! நீயே கழறு.

என்று சொல்லுகிறார். நீ என்ன சொல்லுகிறாய்?

நளி:—என்னையே இதற்கு நியாயங் கேட்பதுபோ லிருக்கிறதே. சரி! சரி!! நானென்ன சொல்லப் போகிறேன். உலகசுபாவந்தான் இது.

விசா—எப்படி?

நளி—ஒருசமயம் நானொரு கல்விச் சங்கத்திற்குப் போயிருந்தேன். பல வித்வ ரத்தினங்கள் அங்கு விஜயஞ் செய்திருந்தனர். அவர்களில் ஒருவருக்கொருவர் தங்களைத் தாங்களே குறைத்துப் பேசிக்கொண்டனர். அதைக் கண்ட விகடனொருவன் சடக்கென எழுந்து அவ் வித்வான்களுள் ஒருவரைச் சுட்டி "சபையோரே! இவர் பரம சண்டாளர். கல்வி ஞானம் அற்பமுமில்லாதவர். தம்முடைய குற்றத்தைத் தாமே ஒப்புக்கொள்ளுகிறார். கொடும் பாவியான இவரது முக தரிசனம் நமக்கு உதவவே உதவாது. இவரை அப்புறப் படுத்துங்கள்" என்றான். உடனே அவ் வித்வானுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. அவர் விகடனை நோக்கி "நாயே! நீயா எனது கல்வித் திறத்தைக் கணக்கிடப் போகிறாய்? வாயை மூடு! வம்பு விளைக்காதே," என்றார். இப் பேச்சைக் கேட்டதும் விகட

னிடத்திலிருந்த பொறுமை வெறுமையாய்க் கோபாகாரமாய் நிமிர்ந்தது. அவன் அந்த வித்வானை உறுத்துப் பார்த்து, "ஓய்! உனது பவிஷு எனக்குத் தெரியாதா? உன்னைப்போல் எத்தனையோ பேர் என்னிடமகப்பட்டுக்கொண்டு தத்தளித்துப் போயினர். ஜாக்கிரதை.—

"பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டாம்
அலர்கதிர் ஞாயிறைக் கைக்குடையுங் காக்கும்
பலகற்றார் கண்ணு முளவாஞ் சிலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல்."

என்றான். இதற்குள் அங்கிருந்த சேவகனொருவன் ஓடிவந்து இருவரையுஞ் சமாதானப்படுத்தினான். ஒருவரும் அடங்கவில்லை. "அடே! நீ அப்புறம் போ; உன்னை யாரழைத்தது?" என்று ஒரு வித்வான் சொன்னார். சேவகன் அவரை ஏற இறங்க நோக்கி, "யாரை ஓய்! 'அடே, கிடே' என்று உளறுகிறாய். நான் இப்படி யிருக்கிறேனென்று கேவலமாய் நினைத்துவிட்டாயோ. உனக்கேயல்ல உன்னைப் படைத்தவனுக்கும் புத்தி சொல்ல வல்லவனென்று இனியாவது உன் மன ஏட்டில் பதிய வைத்துக்கொள். அம்மா! என்னை உங்கள் வீட்டுத் தோட்டத்துக் கீரை என்று கனவு கண்டனை போலும்"—என்றான். வித்வான் அவனை அதட்டி, "அடே! நான் உபசாரமாய் என்னைத் தாழ்த்திப் பேசினேனே யல்லாது உண்மையிலல்ல. நீ யதை எப்படி ஊர்ச்சிதப் படுத்தலாம். உலக மரியாதை எனக்கு தெரியாதா?" என்றார். விகடன், "ஐயா! நானும் உலகசுபாவத்தை யநுசரித்தே என்

னைத் தாழ்த்திப் பேசினேன். 'கூழுக்கு மாங்காய் தோற்குமா?' சகலமுங் கற்ற உமக்கு இது தெரியாமற் போனதென்ன?" என்றான். அடி! விசா! பார்த்தாயா இவர்கள் உட்கருத்தை. ஒருவரும் உண்மையில் தம்மைத் தாழ்த்திக்கொள்ள மாட்டார்கள். ஓரெஜமானிடத்துள்ள அற்பக் கூலியாளனும் எதிரில் காட்டிய மரியாதையை மறைவில் கண்டித்துப் பேசுவான். "நான் உலக தருமத்தை யொட்டி அவ்வாறு தாழ்வாக நடந்து வருகிறேன். எஜமானனுக்கு மாத்திரம் இரண்டு கொம்பு அதிகமாய் முளைத்திருக்கிறதோ? அவனும் என்னைப்போ லொரு மனிதன் தானே. பணக்காரனா யிருந்தால் அவன் வரையிலிருக்கிறான். "ஏழையா யிருந்தோர் பல்லக்கேறுதல் கண்டிலீரோ?'; என்கிறபடி, நானும் ஒந காலத்தில் அவனுடைய அந்தஸ்தை யடைவேன். அவனும் என்னுடைய நிலைமைக்கு வரலாம். பெருமையும் சிறுமையும் யாருக்குச் சொந்தம். சகடக்கால்போல மாறிக்கொண்டு வரும் என்பது அநுபவமல்லவா?" என்றான். இதனால் நாம் என்ன தெரிந்துகொள்ளுறோம்? வயிற்றுப் பாட்டுக்கு வருந்தி யுழலும் பரம வறிஞனும் உபசாரமாக என்ன சொல்லிக்கொண்ட போதிலும், உண்மையி லொருவன் தன்னை யிழித்துப் பேசினால் பொறுக்கமாட்டான். அந்த நிமிஷமே தனது முக்கால ஸ்திதிகளையும் முறை முறையாய் விரித்துப் புகலுவான். பேச அறியாதவன்கூட அப்பெருமைகளை முக்கி முக்கி முட்டி முரணிக்கொண்டாவது குளறிப்பேசுவான். இந்த விஷயத்தில் எவரும்

கால்தாழ மாட்டார்கள். இதுதான் உலகசுபாவம்.

விசா:—ஆனால் உலகமே உபசார வழக்கிலமர்ந்திருக்கிறதோ?

நளி:—பின்னென்ன வென்று மலைக்கிறாய்; உலகத்தைப் பொய், பொய், பொய்; முக்காலும் பொய் என்று முற்றத் துறந்த முனிவர்களு மன்றோ முறையிட்டிருக்கின்றனர். பிறந்தபோதே பிரபஞ்சத்தைத் துறந்தவரொருவ ருண்டு. அவ்வாறு அவர் சடத்தைக் கோபித்து விளங்கியதால் அவரைச் 'சடகோபர்' என்று உலகம் அழைக்கும். அவர் உலகத்தைப் பற்றி என்ன சொல்லுகிறார் தெரியுமா? நானே சொல்லுகிறேன் கேள்.—

"பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியா முறாமை யுயிரளிப்பான்
எந்நின்ற யோனியு மாய்ப்பிறந் தாயிமை யோர்தலைவா!
மெய்ந்நின்று கேட்டரு ளாயடி யேன்செய்யும் விண்ணப்பமே"

என்றார். இந்த அழகான சூத்திரத்தை, அடி! விசா! கொஞ்சம் கவனித்துப் பாரடி! உலகம் நம்மைத் தன் வசப்படுத்திக்கொள்ளும் ஓயாத சக்தியைக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட உலகத்தை நாம் நமது வசப்படுத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும் அந்த முயற்சி அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று வகையின்பாற் பட்டதா யிருக்கின்றது. அறத்தின் விளக்கம் ஞானம்; பொருளின் விளக்கம் ஒழுக்கம்; இன்பத்தின் விளக்கம் சரீரம். நல்ல பயனைப் பெறுவதற்குச் செவ்வனே கடைப்பிடிக்க வேண்டிய ஞானம், ஒழுக்கம், இன்பம் என்கிற

மூன்றும் நம்மால் முறைபிறழ்வான அநுஷ்டிப்பையடைந்து வருகின்றன. இது இருள்தரு மாஞாலத்தின் இயல்பு. இதனை அநுபவ முறையிற் கண்ட அல்லது தீர்க்க தரிசித்த பெரியார், "இந்த உலகம் வெறும் பொய்யோடுகூடிய ஞானத்தையும் (அறிவையும் அல்லது உபசாரத்தையும்), வெளி மயக்கான ஒழுக்கத்தையும், நிலையில்லா இன்பத்துக் கிடமான அழுக்குடம்பையுங் கொண்டிருக்கின்றது. இவ்விதமாயுள்ள ஒப்புரவை இனிமேலாவது தாசபூதர்களாகிய அடியோங்கள் பெறாதபடி யருள்செய்ய வேண்டும். இப்படி நாங்கள் உன்னைக் கேட்பதற்குக் காரணம், எப்படி உடையவன் தன் உடைமையைக் காப்பாற்றப் பல விதம் பாடுபடுவானோ அப்படி நீ உன் சொத்தாகிய எங்களை ரட்சிக்கத் தாவர சங்கம வடிவமான எல்லாப் பிறப்பிலும் நுழைந்தமையேயாம்; இப்படி நுழைந்த நீயோ பற்றற்ற நித்திய சூரிகள் வழிபடும் இறைமையை யுடையவன்; அப்படிப்பட்ட முதல்வனே! நாங்கள் சொல்லுவது சத்தியம்; அவ் விண்ணப்பத்தைச் செவி சாய்ந் தேற்று எங்களை ஆதரித்தருள்வாய்" என்று மன்றாடி யிருக்கின்றனர். இவ்வண்ணம் மன்றாடுவதற்கு முகாந்திரம் இவ்வுலக சுபாவத்தின் விபரீதமல்லவா? இப்பாசுரத்தால் நாம் உலகசுபாவம் இத்தன்மையான தென்று அறியலாகாதா?

விசா:—அறிந்துகொண்டேன். ஆனால் கடவுளை வழிபடுவது எப்படி?

நளி:—சமீபகாலத்தி லிருந்த ஒரு சுவாநுபூதிமான் சொன்னதையுங் கேள்.—

கீர்த்தனை.

பல்லவி.

சும்மா சொல்லாதே நெஞ்சமே—ஸ்ரீராமன் பேரைச்
சும்மா சொல்லாதே நெஞ்சமே.

அநுபல்லவி.

சும்மா சொல்வதிலுனக்—கெம்மாத்ரம் பலனில்லை
இம்மா நிலங்கள் மெச்சும்—எம்மான் தாரகப் பேரை (சு)

சரணங்கள்.

1. மங்கல்யம் ஒன்று தரிக்க—பொய்யை மெய்யென்னும்
மங்கையர் அங்கீகரிக்க
தங்கண வன்பெயரை—எங்குஞ் சொல் லாமல்,அந்த
ரங்கந்தனில் சொல்வார்போல்-பொங்கமுடன் சொன்னால்
சொல் (சு)

2. தருக்க சாஸ்திரங் கல்லாதே—சிவன் மால் என்று
பெருக்கச் சினந்து சொல்லாதே
இருக்குந் தாரகம் ஒன்றே—சிறக்கும் அறிவளிக்கும்
நெருக்குஞ் சிரத்தையில்நின்-றுருக்கமுடன் சொன்னால்
சொல் (சு)

இம்மாதிரியாகத்தான் நாம் வழிபட வேண்டும். இப்படி இவர்கள் குதூகலமாகப் பேசிக்கொண்டிருக்கையில், மேல் மாடிக்குப் போயிருந்த தத்துவ சாஸ்திரியார் இப் பெண்பிள்ளைகளின் கூறிய அறிவுக்கும் சமயோசிதமான சமத்காரப் பேச்சுக்கும் சந்தோஷப் பட்டு மீண்டும் இவர்களுடன் பேச ஆவல்கொண்டு, அவர்களுடைய பெற்றோர்களிடம் "இதோ வருகி

றேன்" என்று சற்றுநேர சாவகாச விடைபெற்று வந்தனர்; வந்ததும்,

தத்துவ சாஸ்திரி:—குழந்தைகளே! நீங்கள் மிகவும் புத்திசாலிகள். உங்களிடம் பேச எனக்கு மெத்தவுங் களிப்பா யிருக்கிறது. நீங்கள் பெரியவர்களையும் வெல்லத் தக்க வல்லமைசாலிகள்.

விசா:—பெரியவர்களா? உருவிலா? அறிவிலா?

தத்-சா:—ஹா-ஹா-ஹா-ஹா-நன்றாய்க் கேட்கிறீர்கள். அறிவிற் சிறந்தவர்களையே நீங்கள் பெரியோர்கள் என்று நினைத்திருக்கிறீர்கள் போலும்.

நளி:—ஆம், ஐயா! கல்லெல்லாம மாணிக்கக் கல்லாமா?

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

தத்-சா:—என்னை நீங்கள் பெரியவரில் ஒருவனாக மதிக்கவில்லை யென்று நினைக்கிறேன்.

விசா:—ஐயா! நீரோ தத்துவ சாஸ்திரி, எப்படி நாங்கள் உம்மைச் சிறியவரென்று மதிப்போம்?

நளி:—அடி! விசா! இவர் நம்மைச் சிறுமியரென்று மதித்தல்லவோ இவ்வளவு தூரம் நம்முடன் வாதாடுகிறார். நல்லது!

"மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீருமாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்."

என்பது இவர் கேட்டறியாததோ?

210785

விசா:—அது இருக்கட்டும். நானொன்று கேட்கிறேன். அதை இவர் விளக்கட்டும்.

கேள்வி:—ஐயா! இந்த உலகத்தில் ராக்ஷசி ஒருத்தி யிருக்கிருள். அவள் தான் பெறும் பிள்ளைகளை யெல்லாம் விழுங்கி விடுகிருள். அவள் யார்?

தத்-சா:—அப்படிப்பட்ட ராக்ஷசியை நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை.

நளி:—போம் ஐயா. நீர் பெரியவரா யிருந்தும் எங்கள் சிறு கேள்விக்குப் பதிலளிக்க இஷ்டமில்லாதிருக்கிறீர். அக் கேள்விக்கு, விடை—

'கடல்'. கடலானது தன்னால் உற்பத்தியாகும் நதிகளை யெலலாம் தானே விழுங்கிவிடுகிறது

தத்-சா:—பேஷ். அடடா! எனக்கிந்த யோசனை கொஞ்சமும் பிறக்கவில்லை. போகட்டும்; என்னை நீங்கள் பெரியவனென்று மதிப்பிடவில்லையே. நானொரு கேள்வி உங்களைக் கேட்கலாமா?

விசா.—ஆக்ஷேபனையின்றிக் கேட்கலாம். பந்தியில் பாரபக்ஷமா?

தத்-சா.—உங்கள் தைரியமே தைரியம். கேட்கட்டுமா? கேட்கட்டுமா? கேட்கட்டுமா?

நளி:—என்ன ஐயா! சந்தேகம். கேளுமே?

தத்-சா:—மண்ணில், கடலில், மலையில் பெரியதெது? எப்படி?

விசா:—இதுதானே. அடி! நளினு! இக்கேள்விக்கு விடை நீ சொல்லுகிருயா? அல்லது நானே சொல்லட்டுமா?

நளினு—நான் சொல்லுகிறேன். ஐயா! தத்துவ நிபுணரே! கேளும். (1) மண்ணில் பெரியது 'சமய உதவி' அதாவது உரிய சமயத்திலுதவி புரிதல். அதற்குப் பிரமாணம்:—

"காலத்தினுற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

(தக்க காலத்தில் ஒருவன் செய்த உதவி அற்பமானலும் அந்தக் காலத்தை உத்தேசிக்க, அது மண்ணுலகினும் பெரியதாம்.)

(2) கடலில் பெரியது 'பரோபகாரம்.'

பிரமாணம்:—

"பயன் தூக்கார் செய்த வுதவி
நயன் தூக்கின், நன்மை கடலிற் பெரிது"

(பிரதிபலனைக் கருதாமல் செய்த உதவியின் நன்மை ஆராய்ந்து பார்க்கின் கடலினும் பெரியதாம்)

(3) மலையில் பெரியது 'அடக்கம்'

பிரமாணம்:—

"நிலையில் திரியா தடங்கியான்தோற்றம்,
மலையினு மாணப் பெரிது."

(தன் நெறியினின்றும் வேறுபடாது அடங்கி நடப்பவனுடைய அடக்கம் மலையின் உயர்ச்சியினும் மிகப் பெரியதாம்)

தத்-சாஸ்:—குழந்தைகளே! நீங்கள் பண்டிதரையும் வெல்லும் பாக்கியம் படைத்தவர்கள். வீணாக நான் எனக்கு மிஞ்சினவர் ஒருவரு மில்லை என்று

அகங்கரித்திருந்தேன். உங்களால் அது என்னை விட்டு எங்கேயோ பறந்து போய்விட்டது.

விசா:—ஐயா! தத்துவ ஞானியாரே! அகங்காரம் மாத்திரம் ஒருவரும் கொள்ளக்கூடாது. ஒரு சிறு கதை சொல்லுகிறேன் கேளும்.

ஓரூரில் ஒரு கிழவியிருந்தாள். அவள் தோசை சுட்டு ஜீவிப்பவள். தோசை சுடுவதற்காக அதிகாலையில் எழுந்து விடுவாள். சிலசமயம் நேரமாய்ப் போகும். அப்படி ஆகாதிருப்பதற்குச் சேவலொன்று வளர்த்து வந்தாள். அது காலையில் கூவுவது வழககம். முதல்தரம் கூவும் போதே அவள் எழுந்திருந்து தன் வேலையைச் செய்ய ஜாக்கிரதைப் படுவாள். இவள் தோசை சுடும்போது அந்த மார்க்கமாக மலபாதையை நிவர்த்திக்கப் போகிறவர் பலர் சுருட்டுப் பிடிப்பதற்கு அந்தக் கிழவியை நெருப்புக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இது அவளுக்குப் பெருந் தொந்தரவாயிருந்தது. "ஆனாலும் என்ன! நான் எப்போது கடை வைப்பேனோ வென்று நெருப்புக்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். தோசை விற்பனை யாகா விட்டாலும் அடிக்கடி வருவார்க்கும் போவார்க்கும் நெருப்பு கொடுத்து வருவதே பெரிய வேலையாய் விட்டது. நல்லது. இவர்கள் மூஞ்சியில் சாணி போடுகிறேன். அதற்கு ஒரு வழியுண்டு. என் கோழி கூவித்தானே பொழுது விடிகிறது. அதை நிறுத்தி விட்டால் பொழுது விடியப் போகிறதில்லை. விடிந்தாலல்லவோ இவர்கள் எழுந்து நெருப்புக்கு நம்மிடம்

வரப்போகிறார்கள்" என்று தன் மனதில் தீர்மானித்துக் கொண்டு, அன்றையதினமே அவ்வூரை விட்டுத் தன் கோழியை எடுத்துக் கொண்டு, பக்கத்துக் கிராமத்திற்குப் போய்விட்டாள்; அங்கு வழக்கம் போல் அதிகாலையில் தோசை சுடஆரம்பித்தாள். அப்போது அவ்வழியாய் வருவார் போவாரை நோக்கி "ஐயா! இந்தக் கிராமத்திற்கு வடபாகத்திலுள்ள கிராமத்தில் பொழுது விடிந்ததா?" என்று கேட்டாள். அவர்கள் "ஏன் பாட்டி! அப்படிக் கேட்கிறாய்?" என்றார்கள். அதற்கவள் "நான் அந்த ஊரில் இருந்தவள்- அங்கு என்கோழி கூவினதும் பொழுது விடியும். நான் தோசை சுட ஆரம்பிப்பேன். கொல்லைக்குப் போகும் அவ்வூரார் நான் எந்த இடத்தில் தோசை சுடுகிறேனோ அந்த மார்க்கமாகத்தான் போகவேண்டும். போகும்போதும் வரும்போதும் என்னை நெருப்புக்கு நிர்ப்பந்தப் படுத்துவார்கள். அது எனக்குச் சகிக்கக் கூடாத கஷ்டமாயிருந்தது. அதனால் என் கோழியை எடுத்துக் கொண்டு நான் இவ்வூருக்கு வந்துவிட்டேன். என் கோழி இங்கு வந்து விட்டபடியால் அந்த ஊரில் எப்படிப் பொழுதுவிடியப்போகிறது. அதை எண்ணித் தான் 'அங்கு பொழுது விடிந்ததா?' என்று உங்களைக் கேட்கலானேன்," என்றாள். இப்பேச்சைக் கேட்டவர்கள் கைகொட்டி நகைத்து "அடி பாட்டி! நீ இப்படியுஞ் செய்துவிடலாமா? இனி அந்த ஊரார் எப்படி வாழ்வார்கள்? உன் செல்லக் கோழி கூவியன்றோ திறு பொழுது விடியவேண்டும்!" என்றார்கள். கிழவி முணு முணுத்துக் கொண்டு "உங்களுக் கென்ன வாய்

நோவாமல் சொல்வதற்கு. என் கஷ்டம் எனக்குத் தெரியும். 'எருது நோய் காக்கையறியுமா' அவர்கள் வாயில் மண்போடத்தானே இங்கு வந்தேன்" என்றாளாம். பார்த்தீரா! இந்தக் கிழவியின் மூடத்தனமான அகங்காரத்தை. 'தன் கண் மூடினால் உலகம் கண் மூடும்' என்று பூனை நினைத்துச் செய்வதுபோலிருக்கிறது இவள் செய்கை. இவளது கெட்ட எண்ணம் இவள் வாயினாலேயே வெளியானது கண்டஜனங்கள் இவளைப் பலவாறு தூஷித்து, "இவளிடத்தில் ஒருவரும் தோசை வாங்கக் கூடாது. இவளுக்கு வேண்டிய உதவியும் செய்ய முன்வரக் கூடாது. 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது இவளிடம் பலித்துவிட்டது" என்று சொல்லி அவளைப் பராமுகஞ் செய்தார்கள். அகங்காரங் கூடவே கூடாது.

தத்-சாஸ்:—குழந்தைகளே! உங்கள் அமுதவாக்கு என்னைத் திருத்தி விட்டது. இனியான் நல்வழியில் நடந்து அடக்கத்தைக் கைப்பற்றி வருவேன்.

நளி:—ஐயா ஞானியாரே! நான் சொல்லுவதை மட்டும் எப்போதும் கவனத்தில் வைத்து நடப்பீராக.

'பற்பலநூல் கற்றுணர்ந்த பண்டிதனே யானாலும்
நற்குணங்கள் எள்ளளவும் நண்ணாத— துர்க்குணனை
முற்ற வெறுக்க முடிமேல் மணியிருந்தென்?
புற்றரவைக் கிட்டார் புகுந்து'

இது தான் நான் உமக்குத் தரத்தக்க உபதேசம். இனி நீர் சுகமாய்ப் போய்வரலாம்—என்றாள்.

இத்துடன் தத்துவ சாஸ்திரியார் எல்லாரிடத்திலும் விடைபெற்றுக் கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார். அவர் போனதும் நளினா விசாலாட்சியை நோக்கி "அடி! விசா! உலகத்தில் அநேகம் பேர் இங்கொன்றும் அங்கொன்றும் கற்றுக் கொண்டு ஆடம்பரத்துடன் உலகை மிரட்டிவருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள்வாயை மாத்திரம் திறவாமலிருந்தால் மேன்மை பெறலாம். இதுவிஷயமாக ஒருவர் சொல்லுவதைக் கேள்.

"ஆடையால் ஏனை அணியால் அலங்கரித்துப்
பீடுபெற வந்த பெருமூடன்—நீடவையில்
எவ்வளவும் பேசா தடங்கி யிருப்பானோ
அவ்வளவும் மேன்மை யவற்கு." (வரும்)

சூரிய விக்கிரகம்

வட இந்தியாவிலுள்ள வரேந்திராவுக்குச் சமீபத்தில் பூமியை வெட்டியபோது சூரிய விக்கிரகமொன்று தென்பட்டது. அதற்கு ஒரு தலைக்கு அதிகமாகவே சிரசுகள் இருந்ததென தந்தியினால் தெரியவருகிறது.

இந்திய ஆகாயத் தபால்

இப்பொழுது கோடைக்காலம் ஆரம்பித்துவிட்டபடியால் இந்திய ஆகாய விமானத் தபால் வருகையையும் தொகுத்து நிர்ணயித்திருக்கிறார்கள். தபால்களை ஏற்றிக் கொண்டு லண்டனிலிருந்து சனிக்கிழமை காலை 6-மணிக்குப் புறப்படும் விமானம் திங்கட்கிழமை சாயங்காலம் அலெக்ஸாண்டிரியா என்னும் துறைமுகம் வந்து சேரும். அங்கிருந்து செவ்வாய்க்கிழமை காலையில் காசா, செவ்வாய்க்கிழமை மாலை பாக்தாது. புதன்கிழமை காலை பாஸ்ரா, வெள்ளிக் கிழமைப் பிற்பகல் கராச்சி, சனிக்கிழமை மாலையில் டெல்லி. இந்தவிதமாக லண்டனிலிருந்து டெல்லிக்குவந்து சேரும் தபால்கள் ஒரே வாரத்தில் வருவதற்காகும்.

தானிய விலையைக் குறைப்ப தாகாது

ஒரு பணக்காரனுக்கு வருஷந்தோறும் அவனுடைய வயலில் ஏராளமாக நெல் விளைந்து வந்தது. அவன் அந்த நெல்லைச் சேர்களாகக் கட்டி வைத்திருந்து ஊர் முழுவதும் நெல்லில்லாமல் செலவழிந்த காலத்தில் அதிக விலைக்கு விற்று ஏழைகளிடம் பணம் சம்பாதித்து வந்தான்.

இப்படி அவன் செய்வது ஏழைகளுக்குப் பொறுக்க முடியாத கஷ்டமாயிருந்தது. அவர்களெல்லோரும் அவனைப் 'பாவி' என்றும் 'இவன் காசில் இடிவிழ' 'இவன் ஆசை பாழாக' என்றும் சபித்து வந்தார்கள்.

அவன் அவர்களுடைய அந்தச் சாபத்தை யெல்லாம் பொருட் படுத்தாமல் காசிலேயே கண்ணாயிருந்து அளவற்ற பொருள் தேடி இறுமாப்படைந்தான்.

அவனுக்கொரு மகனிருந்தான். அவன் பெரிய டம்பத்தில் ஈடு பட்டவனும் தந்தையின் பேச்சைப் பொருட்படுத்தாதவனும் மனம் போனபடி செலவு செய்கிறவனுமிருந்தான். அந்தப் பிள்ளையை அந்தப் பணக்காரப்பாவி தன்னுடைய விரோதியாக எண்ணினான். ஆனாலும் அவனைத் தண்டித் தடக்க அவன் மனம் இடந்தரவில்லை. என்ன செய்வான்! தான் சேர்த்து வைத்திருந்த பொருளைக் கண்டபடி செலவிட்டு வீணாக்குவதை எண்ணும் ஒவ்வொரு தடவையும் அவன் வயிறு பற்றியெரியும்.

இப்படியிருக்கையில் தகப்பனுக்கும், மகனுக்கும் இருந்தாற் போலிருந்து பெரிய சண்டையுண்டாய் விட்டது. மகன் பலவான். தந்தை கிழவன். ஆகையால் மகன் தந்தையை மூட்டை தூக்குவதுபோல் தூக்கி வீட்டுக்கு வெளியே போட்டுவிட்டான். ஊரார் ஒருவரும் இந்தச் சண்டையை விலக்க முன் வரவில்லை; "ஏழையை வஞ்சித்துச் சம்பாதித்த பாவிக்கு மகனே விரோதியானான். அடிபட்டுச் சாகட்டும்" என்று சும்மா விருந்து விட்டார்கள்.

இச்சமயத்தில் கிழவன் கட்டி வைத்திருந்த நெற் சேரில் எவனோ நெருப்புவைத்துவிட்டான். அப்போது "ஐயோ! நெற் சேரில் நெருப்பு! நெருப்பு" என்று கூவியது கிழவன் செவியிற் பட்டது. கிழவன் "ஆ நெருப்பா!" என்று கூறி அப்படியே பிராணனை விட்டு இறந்து போனான். மகன் குதூகல மடைந்தான்; கொஞ்ச நாட்களில் தந்தை சேர்த்து வைத்திருந்த பொருளைப் பாழாக்கிப் பராரியானான்.

இதனாலேதான் ஔவையார் "அஃகம் சுருக்கேல்' என்று கூறியருளினார். சோமாஸ்கந்தன்

---

3 அடி யானைகள்

15-ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஸிஸிலி, மால்டா ஈஜிப்து ஆகிய விடங்களில் ஏராளமான குள்ள யானைகள் இருந்தனவாம். தற்போது கிரீட், ஸைப்பிரஸ், சார்டீனியா ஆகிய விடங்களிலும், சிசிலித் தீவிலும் இவ்வித யானைகள் காணப்படுகின்றனவாம். இவை 3 அடி உயரத்திலிருந்து 6 அடிக்குமேல் வளர்வது இல்லையாது. இவ்வித யானைகள் கண் காட்சிகளில் வைக்கப்படுவதற்கு ஆபிரிகாவிலிருந்தும், மத்திய தரைக்கடலிலுள்ள இதர விடங்களிலிருந்தும், கொண்டுவர முயற்சி செய்யப்படுகிறது. நாய் பூனைகள் போன்று அவைகளையும் வீட்டில் வளர்த்து அவைகளிடம் வேலைவாங்க முடியுமாம்.

பாடும் நரி
விநோத நடவடிக்கைகள்

ஓர் நரி மனிதர்களைப் போலவே பாடவும், குறிப் பறிந்து நடக்கவும் அறிவு பெற்றிருக்கிறது. அதன் பெயர் "லேடி". கிரிகரி மேட்கராப் என்ற வாத்தியக் காரனுக்குச் சொந்தமானது.

இந்நரி சைகையினாலாவது, அல்லது கண் ஜாடையினாலாவது இடும் உத்தரவைத் தெரிந்துகொண்டு அதன்படி நடக்கும். அது எஜமானனின் சைகைக்குத் தகுந்த மாதிரி கூத்தாடும். தீக்குச்சி, பாதரக்ஷை, பத்திரிகைகள் முதலியவைகளைக் கொண்டுவந்து கொடுக்கும். இப்போது அதைப் பேசவும் பழக்கி வருவதாகச் சிலர் கூறுகின்றனர்.

'லேடி' இவ்வேடிக்கைகளை யெல்லாம் செய்யும்படி அன்பாகவும், சமயத்தில் மிரட்டியும கற்றுக் கொடுத்தேன். இது இப்போது இங்கிலாந்திலுள்ள நரிகள் யாவற்றிலும் அதிக புத்திசாலித்தனமானதென நான் நினைக்கிறேன். நான் மணி கேட்டால் அது தனது பின்னங் கால்களில் உயர்ந்து நின்று எனது சட்டைப் பையிலுள்ள கடிகாரத்தை எடுக்கும். நான் வாத்தியப் பெட்டியில் இசைக்கும் ராகத்தை அதுவும் ஒத்துப பாடும். விருந்தாளிகளை உபசரிக்கும்படி கேட்டுக் கொண்டால், அது விருந்தாளிகளை நேராகப் பார்த்து மூன்று தரம் குரைக்கும் என்று புரொபசர் மக்காராப் கூறுகிறார்.

(தமிழ்நாடு)

நடராஜப்பத்து

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறைநான்கின் அடிமுடியும் நீ
மதியும்நீ புவியும்நீ புனலும்நீ அனலும்நீ
மண்டலமிரண்டேழும் நீ
பெண்ணும்நீ ஆணும்நீ பல்லுயிற் குயிரும்நீ
பிறவும்நீ ஒருவன்நீயே
பேதாதிபேதம்நீ பாதாதிகேசம்நீ
பெற்றதாய் தந்தைநீயே
பொன்னும்நீ பொருளும்நீ இருளும்நீ ஒளியும்நீ
போதிக்கவந்த குருநீ
புகழொணாக் கிரகங்க ளொன்பதும் நீ யிந்த
புவனங்கள் பெற்றவனும்நீ
எண்ணரிய ஜீவகோடிகளின்ற அப்பனே
என்குறைகளார்க் குரைப்பேன்
ஈசனே சிவகாமிநேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 1

மானாட மழுவாட மதியாட புனலாட
மங்கை சிவகாமியாட
படலாட நூலாட மறையாட திரையாட
மறைதந்த பிரமனாட

கோனுட வானுலகு கூட்டமெல்லாமாட
குஞ்சர முகத்தனுட
குண்டலமிரண்டாட தண்டைபுலி யுடையாட
குழந்தை முருகேசனுட
ஞானசம்பந்தரொடு இந்திரர்பதினெட்டுமுனி
அட்ட பாலகருமாட
நரைதும்பை அறுகாட நந்திவாகனமாட
நாட்டியப் பெண்களாட
வினையோட உனைப்பாட எனைநாடி இதுவேளை
விருதோடு ஆடிவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 2

(வரும்)

பைபிள் பிரசாரம்

பைபிள் இதுவரை 130 பாஷைகளில் மொழிபெயர்க்கப் பட்டு வெளியாக்கப்பட்டிருக்கிறது பைபிள் சங்கத்தார் சென்ற வருடம் 110 லக்ஷம் பிரதிகள் விற்றனர். இதைத் தவிர ஸ்காத்லாந்து தேச பைபிள் சங்கத்தார் 40 லக்ஷம் பிரதிகளும் அமெரிக்க பைபிள் சங்கத்தாரால் 90 லக்ஷம் பிரதிகளும் ஏனைய சங்கங்களாலும் புஸ்தக வியாபாரிகளாலும் 20 லக்ஷம் பிரதிகளும் விற்கப்பட்டன. பிரிட்டிஷ் பைபிள் சங்கம் 1804-ல் ஏற்படுத்தப்பட்டது. இதுவரை அது 39 கோடியே 70 லக்ஷம் பிரதிகள் வெளியிட்டிருக்கின்றது. சென்ற 5-வருடங்களுக்குள்ளாக மட்டும் 5-கோடியே 20 லக்ஷம் பிரதிகள் விற்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் பைபிள் சங்கத்தார் தாம் மணி ஒன்றுக்கு 1,300 பிரதிகள் விற்பதாகக் கூறுகின்றனர். நம்மவர்க்கு நம்மத நூலில் இவ்வளவு சிரத்தை வருமா?

மகாலக்ஷ்மி ஸ்தோத்ரம்

நமஸ்தேஸ்து மஹாமாயே
ஸ்ரீபீடே ஸுரபூஜிதே
சங்கசக்ர கதாஹஸ்தே
மகாலக்ஷ்மி நமோஸ்து தே 1
நமஸ்தே கருடாரூடே
கோலாஸுரபயங்கரீ
ஸர்வபாபஹரே தேவி
மஹாலக்ஷ்மி நமோஸ்து தே 2
ஸர்வக்ஞே ஸர்வவரதே
ஸர்வதுஷ்டபயங்கரீ
ஸர்வதுக்கஹரே தேவி
மஹாலக்ஷ்மி நமோஸ்து தே 3
ஸித்திபுத்திப்ரதே தேவி
புக்திமுக்திப்ரதாயினி
மந்த்ரமூர்த்தே ஸதா தேவி
மஹாலக்ஷ்மி நமோஸ்து தே 4
ஆத்யந்தரஹிதே தேவி
ஆத்யசக்திமகேஸ்வரீ
யோகஜே யோகஸம்பூதே
மகாலக்ஷ்மி நமோஸ்து தே 5
ஸ்தூலஸூக்ஷ்மமஹாரௌத்ரே
மஹாசக்திமஹோதரே

மஹாபாபஹரே தேவி
மஹாலக்ஷ்மி நமோஸ்து தே 6

பத்மாஸனஸ்திதே தேவி
பரப்ரம்மஸ்வரூபிணி
பரமேசி ஜகன்மாதர்
மகாலக்ஷ்மி நமோஸ்து தே 7

ஸ்வேதாம்பரதரே தேவி
நாநாலங்காரபூஷிதே
ஜகஸ்திதே ஜகந்மாதர்
மகாலக்ஷ்மி நமோஸ்து தே 8

மஹாலக்ஷ்மியஷ்டகஸ்தோத்ரம்
யப்படேத் பக்திமான்னர:
ஸர்வஸித்திமவாப்னோதி
ராஜ்யம் ப்ராப்னோதி ஸர்வதா 9

ஏககாலே படேந்நித்யம்
மஹாபாபவிநாசனம்
த்ரிகாலம் யப்படேந்நித்யம்
தனதான்யஸமன்விதம் 10

த்ரிகாலம் யப்படேந்நித்யம்
மஹாசத்ருவிநாசனம்
மஹாலக்ஷ்மீர்பவேந்நித்யம்
ப்ரஸன்னவரதா சுபா 11

சிறுவர் சிறுமிகளுக்கான பகுதி

நற்போதனை

ஒரு மரம் கன்றாயிருக்கையில் எந்த மாதிரியா யிருக்குமோ, அப்படியே பெருமரமாகையிலும் இருக்கிறது. அது பிஞ்சிலே கோணாய் வளர்ந்தால், அப்படியே கோணாய் முற்றுகிறது; வளைந் திருந்தால் வளைந்தே முற்றுகிறது. அது மாற்றப் படமாட்டாது. நம்முடைய நடக்கையும் அப்படித்தான் கெட்ட பிள்ளைகள் பெரும்பாலும் கெட்ட மனிதராய்த் தலையெடுக்கிறார்கள். நல்ல நடக்கை யுள்ள பாலியர் பெரும்பாலும் நன்நடக்யையுள்ள புருஷராய்த் தலையெடுக்கிறார்கள். ஆதலால் நீ பாலியத்தில் பழகுகிற நடக்கையின் மாதிரியைக் குறித்துக் கவலையா யிருக்கவேண்டும்.

நல்லவனா யிருப்பதிலும் கெட்டவனா யிருப்பது மெத்த இலேசு. தன் வயலில் களைகளை விதைக்கிற சமுசாரியைப பூலோகத்தில் காணக்கிடையாது; களைகளை அப்படியே விட்டுவிட்டால், சீக்கிரத்தில் தோட்ட முழுவதும் களையால் மூடப்பட்டுப்போம். ஆனால் நல்ல நவ தானியங்களை அறுக்கும்படி அவன் வெகு கஷ்டப் பட்டு உழுது விதைக்க வேண்டும். நாம் நமது நடக்கைகளைக் குறித்துக் கவலையா யிராவிட்டால் தப்பிதங்களைச் செய்வது நிச்சயமான காரியம். ஆதலால் நன்

நடக்கை எதுவென்று அறிந்துசெய்யும்படி அதிக ஜாக்கிரதை வேண்டியதா யிருக்கிறது.

சில பிள்ளைகள், துர் நடக்கைகளைத் தங்களுக்கு இஷ்டமான நேரத்தில் கட்டோடே விட்டுவிடலாமென்று எண்ணுகிறார்கள். அது முடியாத காரியம். அடிக்கடி "இந்த ஒருதரம் தான்" என்று சொல்லி அநேக கெட்ட காரியங்களைச் செய்கிறோம்; அல்லது பேசுகிறோம். அப்படிச் சொல்லிச் சொல்லி மறுபடியும் செய்கிறோம்.

நம்முடைய மனதில், இது நன்மை இது தீமை என்று சொல்லுகிற சத்தத்துக்கு மனச்சாட்சி என்று பெயர். நல்ல மனச்சாட்சியைப்போல மனத்திற்கு வாழ்வு வேறொன்றில்லை. நம்முடைய மனச்சாட்சிக்கு விரோதமாய்ச் செய்வது தப்பிதமானாலும் நாம் சரியென்று மனதில நினைப்பதெல்லாம் உள்ளபடி சரியல்ல. நமது மனச்சாட்சிக்கு ஒரு வழி காட்ட வேண்டியது.

"பொய்க்குக் காலில்லை" என்று சீனருக்குள்ளே ஒரு பழமொழியும் இருக்கிறது. பொய் நிற்காது; பொயயர் சீக்கிரம் கண்டுபிடிக்கப் படுவார்கள். "கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளையில் தெரியும்" என்று ஒரு பழமொழியுமுண்டு. ஒரு பையன் தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ளும்படி ஒரு பொய் சொல்லுகிறான்; அப்புறம் வேறொரு பொய் சொல்லுகிறான். அப்புறம் முந்தின பொய்யை மூட வேறொரு பொய் சொல்லுகிறான் அப்புறம் வேறொரு பொய்; அப்படியே ஒன்றைமூட ஒன்றைச் சொல்லி அகப்பட்டுக் கொள்ளுகிறான். ஆனால் நிஜமே நிலை நிற்கும். ஒரு ஞானியிடத்தில் "பொய்யருடைய லாபமென்ன?" என்று கேட்டபோது, "அவன் மெய்யைச் சொல்லும்போதும் ஒருவரும் நம்பார்கள். இதுதான் லாபம்" என்று சொன்னார்.

சிலர் வஞ்சகமாய்ப் பேசி தாங்கள் பொய்சொல்லவில்லை என்று ரூபிப்பதற்குப் பிரயாசைப்படுகிறார்கள். இதுதான் கோழைத்தனமாய்ச் சொல்லும் சாமர்த்தியம்; பொய் முகஸ்துதியானது, வஞ்சகர் பேதைமையுள்ளவர்களை ஏமாற்றும்படி பேசுகிற ஒரு மாதிரி பொய்தான். இந்த வழக்கத்தையும் விட்டுவிட வேண்டும்.

அவரவர் அடைய வேண்டிய பலனை அவரவர் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற மனமே யதார்த்தம் எனப்படும். "மற்றவர்கள் உனக்கு எவைகளைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறாயோ அவைகளையே நீயும் அவர்களுக்குச் செய்" என்று பெரியோர் கட்டளையிட்டிருக்கின்றார்கள். இந்தக் கட்டளையை நினைவுகூர்ந்தால் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டியவைகள் இன்னதென்று நன்றாய் நமக்குத் தெரியும். இது மற்றவர்கள் நமக்குச்செய்கிறது எப்படியோ அப்படியே நாமும் அவர்களுக்குச் செய்யவேண்டு மென்று அல்ல. மற்றவர்கள் நமக்குச் செய்யும்படி நாம் விரும்புவதை நாம் அவர்களுக்குச் செய்யவேண்டும் என்று போதிக்கிறது.

சிறுவர் சிலர் சமயம் கிடைக்கையில் வஞ்சிக்கப் பார்க்கிறார்கள். கணக்குச் செய்யும்போது மற்றவர்களுடைய பலகையைப் பார்த்து உத்தரவு எழுதப் பார்க்கிறார்கள். புஸ்தகங்களை மூடிப்போட்டு உத்தரவு சொல்லும் போது, அவர்கள் திறந்து திருட்டுத்தனமாய்ப் பார்க்கிறார்கள். விளையாடும்போது முதலாய் இந்தத் திருட்டுக்குணமிருக்கிறது. இப்படிப்பட்டவையெல்லாம் மகா கேவலமான புத்திதான்.

நம்முடையதை வேறே யாராவது எடுத்துக் கொள்ளச் சம்மதிப்போமா? மற்றவர்களுடையதையும் நாம் எடுக்கக்கூடாது. இது ஒரு பேனாதானே, பென்சல் தானே, இதை யார் கவனிப்பார்கள் என்று சொல்லி எடுப்பதும் நியாயமல்ல.

ஹிதோபதேசி.

பஸ்ஸில் பாம்பு

திருச்சூருக்கருகில் ஒரு மோடார் பஸ்ஸில் சென்ற வாரம் 3 பிரயாணிகள் போய்க்கொண்டிருந்தார்கள். காலில் ஏதோ குத்தினதாக ஒருவர் நினைத்தார் அவர் சோபம் போட்டுக் கீழே விழுந்த பிறகுதான் பஸ்ஸில் ஒரு நல்ல பாம்பு இருந்தது தெரியவந்தது. உடனே பிரயாணிகள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப் பட்டார்கள் இருவர் இறந்துபோய்விட்டனர். மற்றவர் நிலை அபாயகரமாகவே இருக்கிறது என்று டைம்ஸ் ஆப் இந்தியாவுக்கு அதன் நிருபர் அறிவிக்கிறார்.

330 வயது கிழவர்

திருச்சி ஜில்லா, லால்குடி தாலுக்கா ஊட்டம்தூர் என்னும் கிராமத்தில் பிராமண சன்யாசி ஒருவர் இருந்து வருகிறார். அன்னவருக்கு 330 (முன்னூற்றுமுப்பது) வயது ஆகிறதென்றும். அவர் பிறந்தது திருநெல்வேலி யென்றும், அவர் பெயர் குப்புசாமி அய்யர் யென்றும் பாலசோதிடர் ஒருவர் ரேகை சாஸ்திர மூலமாக பார்த்து தெரிவிக்கிறார். மேற்படி மஹானும் சரியென ஒப்புக்கொள்ளுகிறாராம்.

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

வருட சந்தா தபால் கூலி உள்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ. 1 8 0
	பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ...	ரூ. 2 0 0
தனிச்சஞ்சிகை	... ... விலை	ரூ. 0 2 0

1. பத்திரிகைக்கு ஜனவரி௴ முதல் டிசம்பர்௴ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும் ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னுடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதானால் அஞ்சல் மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

விளம்பர விகிதம்

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு	...ரூபா 10—0—0
அரைப் பக்கத்திற்கு ,,	... ரூபா 5—0—0

காண்டிராக்ட் ரேட்டானால் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ், 323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்

வலித்த ஔஷதம்

விலை அணா 10 அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

எல்லா நோய்களுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் டிப்போ,

7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.

Vavilla Press ,Madras.